**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 54/2024 PW.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சரவணன் | த-பெ /க.பெ. | சிவாநந்த சுந்தரம் |
| ஊர்: | : | இலுப்பக்குடி | சமயம்: | |
| வயது: | : | 47/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ரியல் எஸ்டேட் தொழில் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025**

---------------------------------------------------------------------------------------------------

**21.08.2025**

**முதல் விசாரணை:**

1) 05.11.2022 அன்று என் அண்ணன் வீட்டிற்கு எதிரி வந்து மருத்துவ செலவிற்கு பணம் கேட்டார். என் அண்ணன் அன்றைய தினமே ரூ. 9 லட்சம் எதிரிக்கு கடனாக கொடுத்தார். மேற்படி தொகையை ஒரு வருடத்திற்குள் திருப்பி தருவதாக எதிரி சொன்னார். எதிரி வரும்போது கடனுறுதிசீட்டை பூர்த்தி செய்து எடுத்து வந்தார். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1) நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். கடனுறுதிசீட்டு எந்த இடத்தில் வைத்து நிரப்பட்டது என்று உள்ளதா என்றால் எதிரியே நிரப்பி கொண்டுவந்தார். எதிரியுடன் யார் வந்தார் என்றால் அவரது கணவர் வந்தார். கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பமும் காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பமும் மாறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. கடனுறுதிசீட்டில் எழுதியதும், சாட்சியும் என்ற

இடத்தில் யாருடைய கையொப்பமும் இல்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் சோமசுந்தரத்தை எப்படி தெரியும் என்றால் என் உடன் பிறந்த சகோதரர். புகார்தாரர் என் அண்ணன் என்பதால் அவர் உற்பத்தி செய்த ஆவணத்திற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரியும் அவரது கணவரும் வரவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.21 13:31:23 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)